Registered as a news paper at the GPO

தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும், மேலானவற்றையும் எளிதாகப் புரிந்துகொள்கின்றான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகின்றான்."

ஆரம்பம்:- 23ஜூன் 2001, சென்.ஜேம்ஸ் ஆலயம், நல்லூர். தை, மாசி, பங்குனி 2009 இதழ்-28

தீர்க்க தரிசனப் பணியை தினமும் ஆற்றுவதே திருச்சபையின் பாரிய கடமையும் பொறுப்பும் ஆகும்

கொழும்பு பேராயர் உயர் அருட்பணி டுலீப் டி சிக்கேரா அறிக்கை

சமூகத்தில் மக்கள் நலன்களுக்காக செயற்படும் அமைப்புக்களில் திருச்சபை முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒடுக்கப்படுவோருடன் திருச்சபை தன்னை அடையாளப்படுத்துவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் ஒடுக்குவோரை நோக்கி தீர்க்க தரிசனக் குரலைத் தினமும் எழுப்புவது திருச்சபையின் கடமையாகும். குறிப்பாக அண்மையில் எம்.ரீ.வி கூட்டுத்தாபனத்தின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலையும், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்கவின் கொலையையும் நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

எம்.ரீ.வி கூட்டுத் தாபனத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தீவைப்பு, தாக்குதல் உடனடியாக கண்டிக்கப்பட வேண்டும்.

பயங்கரமாக நடாத்தப்பட்ட வன்முறையின் மாதிரியும் செயல் முறையும் தற்போது நிலை கொண்டுள்ள தண்டனையிலிருந்து இலகுவில் தப்பித்துக் கொள்ளும் அறிகுறியை எடுத்துக்காட்டுகின்றது.

நகரத்திலும் குறிப்பாக அலுவலகங்களிலும் நிலை கொண்டுள்ள பாதுகாப்பு எச்சரிக்கை நிலையில் எமது சாலைகளில் ஆயுதம் தரித்த குழுவினர் இலக்கத் தகடற்ற வாகனத்தில் பயணித்து எவரும் கவனியாதபடி இக்குற்றத்தைச் செய்துள்ளனர்.

இத்தாக்குதல் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வு அல்ல. ஊடகத்துறையினருக்கு அச்சுறுத்தல் விடுத்து, துன்பப்படுத்தி, ஜனநாயக விருப்பு,வெறுப்புக்கள், பலதரப்பட்ட கருத்தியல்புகளை வெளிப்படுத்தாமல் தடுப்பதற்கு செய்யப்பட்ட எச்சரிக்கை விடுக்கும் மனப்பாங்காக இதைக் கணிக்க வேண்டும்.

எனவே இம்மனப்பாங்கு ஊடகத்துறையினரால் மட்டுமன்றி, நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளைக் குறித்து தகவல்களை அறியும் உரிமையும், அரசியல் விமர்சனங்களை அறிந்து கொளளும் உரிமையுள்ள அனைத்து இலங்கையினரதும் கருசனையாயிருத்தல் வேண்டும். ஆழ்ந்து ஆராய்தல், விசாரணைகள் யாவும் எப்போதும் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால் மக்கள் இப்போது இது குறித்து தளரா உன்னிப்புடன் இதன் பெறுபேறுகள் பற்றி தளர்ச்சியடைந்துள்ளனர்.

எனவே அரசு குற்றவாளிகளை பெயரிட்டுஅவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அல்லது தற்போதுள்ள பாதுகாப்பு ஒழுங்குகளில் மிக மோசமான குறைபாடு உள்ளது என்பதை விசேடமாக இரவு நேரத்தில் நகரம் துயில் கொள்ளும் போது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டில் எதுவாக இருப்பினும் இந்நிகழ்வு பொதுமக்களின் பாதுகாப்பின்மை, சட்ட ஒழுங்கின்மை போன்றவை மிக மோசமான நிலையில் உள்ளது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

கொழும்பிலுள்ள மக்கள் நடமாடும் சாலை ஒன்றில் பட்டப் பகலில் சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் அரசியல் படுகொலை நாடு முழுவதிலும் கோபம், திகில், அதிருப்தி, ஆகிய பலதரப்பட்ட உத்திர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளன. இந்தக் கண்மூடித்தனமான, உணர்ச்சியற்ற செயலானது சுதந்திரத்தை மதிக்கும் அனைத்து இலங்கை மக்களினாலும் கண்டிக்கப்படல் வேண்டும். ஊடகத்துறையை அமிழ்த்தி மௌனமாக்கும் பாரிய தந்திரமாக இச்செயல் காணப்படுகிறது.

அவரது மனைவி சொனாலி, அவரது பிள்ளைகள் மற்றைய குடும்ப அங்கத்தினர், சண்டே லீடர் பத்திரிகையின் அலுவலக ஊழியர்கள் யாவருக்கும் எமது சபையின் ஆழ்ந்த அனுதாபங்களையும் மன்றாடலின் உறுதி மொழியையும் வழங்குகிறேன்.

உண்மையையும் ஆறுதலையும் தரும் கடவுள் எதிர்நோக்கும் கடினமான நாட்களில் லசந்தா எதை அடைய வேண்டுமென விடா முயற்சியுடன் பாடுபட்டாரோ அந்த தைரியத்தையும் உண்மையும் தந்து உங்களை வழிநடத்தட்டும்.

திரு.விக்கிரமதுங்க சிறப்புள்ள தகவல் துறையாளர். அவர் பத்திரிகைத் துறையை மதித்து அதன் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்கியவர் சத்தியம் மிக மோசமான முறையில் உண்மைக்குப் புறம்பான வழியில் உபயோகப்படுத்தப்படும் இவ்வேளையில், நீதியான, சனநாயக கலாச்சாரத்தை நோக்கிய பாதையில் ஊடகத்துறையினர் உத்தரவாதமுள்ள பணியை வழங்க கேட்கப்படும் வேளை இந்த அரசியல் கொலை மிகுந்த பேரழிப்பு ஆகும். அத்தோடு நல்லாழுகைக்கு ஏற்படும் மோசமான நெருக்கடிக்கு ஓர் அடையாளமாகவும் காணப்படுகிறது.

சட்டம், ஒழுங்கு சீரழிந்த நிலைக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றது.

இப்படியான சூழ் நிலைகளில் சிறந்த சிந்தனை நிறைந்த அரசியல், மதத்தலைவர்கள், எடுக்கும் கூட்டான நடவடிக்கை போன்ற நீதியான அமைதியான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் எனபதில் எந்த விதமான சந்தேகமுமில்லை.

எனவே திருச்சபை சமூகத்தின் மட்டில் அதிக அக்கறையோடு செயற்பட அழைக்கப்படுகின்றது. அதற்கான ஆற்றலையும் சக்தியையும் இறைவன் நமக்குத் தரவேண்டும் என பிரார்த்திப்போமாக!

கட்டுரைத் தொகுப்பு வெளியீடு

05-01-2009ம் ஆண்டு அன்று பிற்பகல் 4 மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் அமரர் அருட்பணியாளர் சாமிநாதர் பிரான்சிஸ் கிருபானந்தன் அவர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் வெளியீடு செய்யப்பட்டது.

இவ்விழாவிற்கு அருட்பணி ஞா.பிலேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் அவர் தனது இயலாமையிலும் தமிழ் இலக்கியங்களை அதிகம் கற்றறிந்து தனது சிந்தனைகளை எழுத்துருவில் வடித்த அமரர். சா.பி. கிருபானந்தன் அவர்களை போற்றுவதாகக் கூறினார்.

மேய்ப்புப் பணிபுரிய வேண்டும் என அதிக ஆர்வம் கொண்டவராக எழுத்தாளர் காணப்பட்ட போதிலும் அப்பணியை நிறைவேற்றக் கூடிய அளவில் அவருடைய உடற்சுகம் போதுமானதாக இராத போதிலும் சிறந்த சமய சமூகவியலாளனாக சமகாலத்தில் பணியாற்றிய அமரரை நன்றியுடன் நினைந்து கொள்வதாக யாழ் ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் கூறினார். மனிதனையும் இறைவனையும் இணைக்கும் ஓர் ஊடகமாக இத்தொடுவானம் என்னும் நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார்.

இந்நூலைத் தயாரிப்பதில் அருட்சகோதரன் V.P. தனேந்திரா அருட்பணியாளர் ஜெரால்ட் போன்றவர்கள் அதிகம் உழைத்ததாக அருட்பணியாளர் போல் றொகான் தெரிவித்தார். மேலும் இறை தொடுவானம் இறையியல், மெய்யியல் ஆகிய ஆக்கங்களை தன்னகத்தே தாங்கியுள்ளது எனப் பேசினார். நயப்புரையை அருட்பணியாளர் அ.பி.ஜெயசேகரம் அவர்கள் ஆற்றினார். மேலும் அவர் சமகாலத்தில் அடிப்படைவாதத்திற்கு எதிராக நகர்ப்பு வாத சிந்தனைகள் முன்வைக்கப்படவேண்டும். இச்சிந்தனைகளை அமரரின் எழுத்தேடுகளிலிருந்து நாம் வாசித்தறியலாம். சூழமைவு இறையியல், சமகால நிகழ்வுகள் போன்ற எண்ணக்கருக்களையும் இந்நூல் சுமந்து வருகின்றது எனக்கூறினார். அருட்பணியாளர் யூட் நிக்சனின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

பணியாளர்களும் பணித் தளங்களும்

2009ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கீழ்வரும் பணியாளர்கள் பின்வரும் பணித்தளங்களில் தமது பணிகளை ஆற்றுகின்றனர்.

1. புனித பவுல ஆலயம் (மிலாகிரிய) - *அருட்பணி. மெல்வின் டீ சில்வா*
2. கிறிஸ்து நாதர் ஆலயம் (தெகிவளை) - *அருட்பணி. பெரிபுரோகியர்*
3. புனித பிரான்சியஸ் (மௌண்ல்லவெளியா) - *அருட்பணி.ஜெயந்தா ஜெயவீரசிங்கம*
4. கிறிஸ்து நாதர் ஆலயம் (கோல்வேஸ்) - *அருட்பணி. நோமன் ஜெயச்சந்திரன*
5. கிறிஸ்து நாதர் ஆலயம் (இங்கிரியா) - *அருட்பணி. பற்றிக்லோறன்ஸ்*
6. புனித இமானுவேல்ஆலயம் (லொக்கேற்) - *அருட்பணி.S.T ஜெயராஜா*
7. கிறிஸ்து நாதர் ஆலயம் (டிக்கோயா) - *அருட்பணி. அன்ரு தேவதாசன்*
8. புனித பேதுரு ஆலயம் (பாமன்கடை) - *அருட்பணி.D.K. பாலகிருஷ்ணன்*
9. புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - *அருட்பணி. அனரு.ஞானையா*
10. சகல பரிசுத்தவான்கள் ஆலயம் (கோட்டை)-*அருட்பணி.T.ஜோர்ஜ்*
11. புனித யோவான் ஆலயம் (வாழைச்சேனை)-*அருட்பணி. S.P.D.செல்வன்*
12. கிறிஸ்து நாதர் ஆலயம் (கோட்டை) - *அருட்பணி.பிரதீப் யே.சூடியான்*
13. கிறிஸ்து நாதர் ஆலயம் -*அருட்பணி. றஞ்சித் ஜெயவீரர்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தெளிவு

இதழ்-21 THELIVU

நீ எதற்காக அழைக்கப்பட்டாய்?

30.12.2008 அன்று கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் மறை திரு. சேவக். ஐசக் தம்பிஜயா இயேசு சகாயம் (சின்னண்ணன்) அவர்களின் வாழ்விற்கும் பணிக்கும் நன்றி செலுத்தும் வழிபாடு காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. இவ் வழிபாட்டில் அருட் பணியாளர் அ.ஸ்ரீபன் அவர்கள் அருளுரையாற்றினார்.

அவர் தமது உரையில் திருச்சபையில் ஒருமைப் பாட்டுப் பணியை முன்னெடுப்பதற்காகவும் சமூகப் பணியைச் செய்வதற்காகவும் தன்னாட்டு மயமக்கல் சிந்தனையை விதைப்பதற்காகவும் கடவுள் சின்னண்ணனை அழைத்ததாகக் கூறினார்.

1918 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ம் திகதி திரு.தம்பியையாவிற்கும் திருமதி மேரிப்பிள்ளை தம்பியையாவிற்கும் மகனாகப் பிறந்தார். இவர் 1947ம் ஆண்டு ஆவணி மாதம் 21ம் திகதி ஆச்சிரம ஊழியராக திருநிலைப்படுத்தப்பட்டார். இவ் வழிபாட்டில் திருப்பத்தூர் கிறிஸ்தவ குல ஆச்சிரமத் தலைவர் டாக்டர் யேசுதாசன் பங்கேற்று, ஆச்சிரமப் பொறுப்பை உணர்த்தி அறிவுரை வழங்கினார்.

நல்லூர் திருச்சபையின் குருவானவர் வண. கனோன் எஸ்.சோமசுந்தரம் அருளுரை ஆற்றினார். வண. எஸ் செல்வரத்தினம், பேராயர் எஸ்.குலேந்திரன், வண. பி.முத்துவேலு ஆகியோர் கைவைத்து இறையருளை வேண்டி செபித்தனர். மெதடிஸ்த, கத்தோலிக்க ஆலயங்களின் பங்களிப்புடன் 1944ம் ஆண்டு களுவங்கேணிப் பகுதியில் எண்பது ரூபாவிற்கு காணி வாங்கப்பட்டு ஆச்சிரமப்பபணி ஆரம்பிக்கப்பட்டது. அடிகளார் இயேசு சகாயத்தின் அருட் பொழிவில் மாத்திரமன்றி கிழக்கு மாகண ஆச்சிரம ஆரம்பத்திலும் சபைகளை ஒன்றிணைத்து செயற்படும் பண்பை நாம் காணலாம். பின் 1955ஆம் ஆண்டு ஆனி மாதம் ஒரு சிறிய ஜெப வீட்டிற்கு கொழும்பு அத்தியட்சகர் கனம் கிரஹம்பெல் அவர்கள் அத்திபாரக் கல் இட்டார். அதன் பின் அதே ஆண்டு ஆவணி மாதம் 25ம் நாள் தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சகர் கனம் சபாபதி குலேந்திரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வாறு ஆச்சிரமத்தை அனைத்து திருச் சபைகளுக்கும் ஒரு பொதுவான செபவிடாக மாற்றுவதில் அடிகளார் பாடுபட்டார்.

எப்போதும் மலர்ந்த முகத்துடன் எல்லாரையும் நேசிக்கும் பண்பாளனாக பழகும் இவர் 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 27ம் திகதி கட்டை வேலி மெதடிஸ்த திருச்சபையில் அருளுரை ஆற்றினார்.

இதுவே அவரது இறுதி அருளுரையாகும். இவருடைய நல்லடக்க வழிபாட்டின் போது தென்னிந்திய திருச்சபையின் பேராயரின் பிரதிநிதி அருட்பணி K.S. ஜெயசிங் அவர்களும், குருநாகல் அங்கிலிக்கன் பேராலயத்தின் பேராயர் லக்க்ஷ்மன் விக்கிரமசிங்க அவர்களும், யாழ். பேராலயத்தின் முன்னாள் பேராயர் குலேந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர். இயேசு சகாயத்தின் அடக்க ஆராதனை வழிபாட்டில் சகல திருச்சபைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை சின்னண்ணன் திருச்சபை ஒருமைப் பாட்டிற்காக அரும்பாடுபட்டார். என்பதனைக் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

இயேசு சகாயம் அடிகளார் சமூகப்பணியிலும் அதிக ஆர்வத்தைக் காட்டி நின்றார். 1957ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது மட்டக்களப்பிலிருந்து மக்கள் அடைக்கலம் தேடி ஆச்சிரமத்துக்குள் வந்தனர். அவர்களை அன்போடு வரவேற்று அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தார். மேலும் இவர் இந்தியாவில் கற்று வந்த ஹோமயபதி என்னும் மருத்துவ முறையை மக்களுக்கு அறிமுகப்படுத்தி சரீர, ஆன்மீக குணப்படுத்தல் பணியிலும் தன்னை இணைத்துக் கொண்டார். இவரது பணியில் எளிமைத்தன்மை, விசுவாசம் போன்றவைகள் காணப்பட்டதை அவதானிக்கலாம்.

இயேசு சகாயம் அடிகளார் தன்னாட்டு மயமாக்கல் சிந்தனையை வளர்ப்பதில் பெரும் பங்கை ஆற்றியுள்ளார். குறிப்பாக கீழைத்தேச இசையைக் கற்றறிந்து மக்கள் மனதைக் கவரக்கூடிய விதத்தில் பாடல்களை இயற்றிப் பாடியுள்ளார். இப்பாடல்கள் மக்களுக்கு ஆறுதலளிப்பவையாக காணப்படுகின்றன. மேலும் 1962ம் ஆண்டு மலேசியாப் பகுதிக்குச் சென்று அங்கும் கீழைத்தேய பாடல்களைப் பாடி மக்களின் பாராட்டைப் பெற்றார். இவ்வாறாக மேலத்தேச இறையியலுக்கு பெரும் சவால் விடுத்தார். இவ்வாறாக திருச்சபையின் ஒருமைப் பாட்டிற்காகவும் சமூகப்பணிக்காகவும் தன்னாட்டுமயமாக்கலை அபிவிருத்தி செய்வதற்காகவும் மிகவும் அயராது பணியாற்றினார்.

இன்றைய இலங்கையின் பல் சமய வறுமை, போர்க் காலச் சூழ்நிலைகளில் கடவுள் எதைச் செய்ய எங்களை அழைத்துள்ளார் என்பதை நாம் ஆராய அழைக்கப்படுகின்றோம்.

வி.பி. தனேந்திரா எழுதிய நவாலியூரானின்

(நவாலியூர் நா.செல்லத்துரை)

கலை – இலக்கியப் பணிகள்

– ஓர் ஆய்வு

கலையுணர்வு ஒரு சிலரிடம் ஊற்றெடுத்து ஓடுவதால் அவர்கள் கலைஞராகின்றனர். ஆனாலும் அவர்களின் கலைப் படைப்புக்கள் நூல் வடிவில் வெளிவருவது மிகக் குறைவு. இது ஒரு குறை என்பது தான் உண்மை. அந்தக் குறையை முற்று முழுதாகச் சிந்தித்தவர் எழுத்தாளரும் வெளியீட்டாளரும் கிறிஸ்தவ பணியாளருமான வி.பி தனேந்திரா அவர்கள் அவரது நல்ல சிந்தனையின் வெளிப்பாடுதான். அவரால் எழுதி நூல் வடிவாக்கப்பெற்ற "நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள்" என்ற நூல்.

இந்நூலின் வாயிலாக நவாலியூரானின் சமூக, இலக்கிய, சரித்திர, புராண, நாடகத்துறையையும், சிந்து நடைக்கூத்துத்துறையையும், சிறுகதை - நெடுங்கதை (நாவல்) கவிதை, கட்டுரை போன்ற ஏனைய கலைத் துறைகளையும் அறிய முடிகிறது.

நாடகத்துறையில் ஆழமாகப் கால்பதித்த நவாலியூரான் இதுவரை எழுபது நாடகங்களையும் எழுதி மேடையேற்றியுள்ளார் என்பதையும் ஏறத்தாழ எண்ணூறு கல்வெட்டுக் கவிதைகளடங்கிய அறுபது நினைவு மலர்களையும் வெளியிட்டுள்ளார் என்பதையும் இந்நூல் குறிப்பிடுகின்றது.

இவரது சமூக நாடகங்களுள் ஒரு சில நாடகங்களான "அடிமை விலங்கு"- "புதியதொரு உலகம்" - "எதிர்பாரமுடிவு" போன்றவற்றிற்குத் தினசரிகளில் வந்த விமர்சனங்களை வாசகர்களின் பார்வைக்காகத்தந்த தனேந்திரா அவர்கள் "நாட்டுக்குத் தேவையான நல்ல தொரு நாடகம்" என்று நவாலியூரானின் "எங்கள் கிராமத்தின் இந்தக் கோலங்கள்" நாடகத்திற்கும் அமரர் டொக்ர் நந்தி எழுதிய விமர்சனத்தையும் வாசகர்களின் கவனத்திற்கு தந்திருக்கின்றார்.

நவாலியூரானின் "நீதி கேட்டாள் சோழநாட்டாள் (இலக்கியம்) "கண்டியம்பதிக்காவலன்" (சரித்திரம்)"தாயகம்" (வரலாறு) போன்ற நாடகங்கள் பார்வையாளர்களின் மனதில் ஆழமாகப் பதிந்து நல்ல பெயரையும் ஆதரவையும் நவாலியூரானுக்கு ஈட்டிக் கொடுத்ததற்கு, அந்நாடகங்கள் பற்றி முறையே கரணவாய்- தமிழ் வித்தியாலய அதிபர் செ.சதானந்தன் சபா-சாரங்கி எழுதிய விமர்சனங்கள் சான்று என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த விமர்சனங்கள் மூலம் மக்களுக்குத் தேவையான கருத்துக்களும் அறிவுரைகளும் கூறப்பட்டுள்ளன என்பதை தனேந்திரா அவர்கள் தெளிவுபடக் கூறியுள்ளார்.

நவாலியூரானின் கல்வெட்டுக் கவிதைகள் கூட அறிவுரை பொதிந்த கவிதைகள் என்பதை வாசகர்கட்கு எடுத்துக்காட்டுவதற்காக ஒரு கவிதை வடிவத்தை இங்கு தந்திருக்கின்றார் நூல் ஆசிரியர், அதை உங்களின் பார்வைக்காகக் கீழே தருகிறேன். இறந்தவரின் குடும்பத்தை ஆற்றித் தேற்றுவதாக அமைந்த கவிதை.

"கிழக்கிலே உதிப்பதும் மேற்கிலே மறைவதும் கதிரவன் செய்பணியாம் மரத்திலே காய்த்துப்பின் நிலத்திலே விழுகின்ற காய்கட்கும் இவ் விதியாம் இந் நிலை தானெங்கள் மானிடவாழ்வுக்கும் இறப்புக்கு இறப்பு இல்லை இத்திரை மீது நாம் ஆகவே ஆறுவம் இவ்விதி எல்லோர்க்குந்தான்."

நவாலியூரானின் சிறு கதைகள் கூட வாசகர்களின் மனதை தொடுபவை என்பதை எடுத்துக் காட்டும்முகமாக சஞ்சீவி வார இதழில் 20-05-1989 வெளிவந்த "நன்றி மறந்த சமுதாயமே" என்ற கதை இந்நூலில் இடம்பெற்றுள்ளது. வாசகர்களின் உள்ளத்தை ஊடறுத்துக் கண்ணீரைக்கக்க வைக்கும் கதை என்று தனேந்திரா அவர்களின் ஆய்வு தெளிவுபடுத்துகிறது.

நவாலியூரானின் இன்னொரு சிறப்பும் கவனிக்கத்தக்கது. 1970 களில் இலங்கை வானொலியின் கிறிஸ்தவ (கத்தோலிக்கமல்லாத)அரைமணி நேர தமிழ் ஒலிபரப்பில் முதன் முதலாக ஒலி பரப்பப்பட்ட நாடகம் இவரது "ஜீவ வெளிச்சம்" என்பது குறிப்பிடத்தக்கது.

பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்ற நவாலியூரான் "முத்துக் கலைஞர்" என்ற விருதை இலங்கை கலைக்கழகத்திடமிருந்து பெற்ற முதல் தமிழ்க் கலைஞர் (2004) என்பது பெருமைக்குரியது.

இலங்கை ஜெயீந்திரா மூவிஸார் தயாரித்த "காத்திருப்பேன் உனக்காக" என்ற கதை-வசனம்- பாடல்கள் எழுதிய இவர் அப்படத்தின் முக்கிய பாத்திரமொன்றிலும், யாழ். கந்தர்மடம் மதுரகான சபா தயாரித்த பூதத் தம்பி என்ற வீடியோ படத்தில் வரும் பூலோக சிங்கா என்ற பிரதான பாத்திரத்திலும் நடித்து நல்ல பெயர் பெற்றார் என்பதைச் செய்தித்தாள்களில் வந்த விமர்சனங்கள் சான்று காட்டுவதாக இந்நூல் ஆய்ந்திருக்கிறது.

இவரின் கலை வாழ்வை மதிக்கும் முகமாக தெற்கு நவாலியூரில் நிமிர்ந்து காட்சி தருகிறது "கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை கலையரங்கு" என்ற கட்டடம் பல கலைஞர்களுக்கு வாய்க்காத சிறப்பு இந்த அரங்கின் மூலம் இவருக்கு கிடைத்திருக்கிறது என்பது இந்நூல் அறியத்தருகின்றது.

எண்பத்தோராவது(81) வயதில் நடைபோட்டுக் கலை வளர்க்கும் நவாலியூரான் மேலும் பல கலைப்பணிகள் ஆற்றிச் சுக நலத்தோடு வாழ வேண்டும்மென இறையாசி வேண்டுகிறேன்.

பெற்றோரும் – பிள்ளைகளும்

சாமர்த்தியன்

சுண்டுக்குளி

எட்டாம் வகுப்பில் கல்வி கற்கும் எனது மகன் தனது செயற்பாட்டு அறிக்கையை (Prgressive report) மெதுவாக நீட்டினான்.

அவன் கல்வி கற்கும் அதே பாடசாலையில் நான் ஆசிரியன். எனது இரண்டு பெண்களும் தமது அபாரமான திறமையினாலும் பெற்ற விருதுகளினாலும் எனக்கு பெருமை தேடித்தந்தார்கள்.

மகன் சற்று மத்திமம்தான். இவற்றை நினைத்துக் கொண்டிருக்கும்போது தான் அவன் தனது செயற்பாட்டு அறிக்கையை மெதுவாக என்னிடம் நீட்டினான். கணிதத்திற்கும், விஞ்ஞானத்திற்குமான் புள்ளிகள் மாற்றப்பட்டுள்ளன என்பதை மேலோட்டமான பார்வையில் யாரும் கண்டுபிடித்து விட முடியாது. மாற்றம் எதுவுமின்றி அடியில் காணப்பட்ட மொத்தப் புள்ளிகள் இதனை மேலும் உறுதி செய்தது. என்னுள் இருந்த ஆசிரியன் வேகம் அடைந்தான் ஆனாலும் ஏதோ ஒன்று என்னைத் தடுத்தி நிறுத்தி ஒரு கணம் சிந்திக்க வைத்தது. செயற்பாட்டு அறிக்கையை மெதுவாக மூடிய வண்ணம் மகனிடம் ஆடைகளை மாற்றி விட்டு உணவுகளை உண்ணுமாறு கூறினேன்.

எனது பாடசாலை நாட்கள் எனது கண் முன்னே வந்தது. எட்டாம் வகுப்பில் கல்வி கற்கும்போது நடைபெற்ற மாகாண மட்டப் பரீட்சையில் சிறப்பு சித்தி பெற்றதால் அது வரை கல்விகற்ற பாடசாலையை விட தரம்கூடிய நகரத்திலுள்ள பாடசாலையில் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டியது. அச்சமயத்தில் என் தந்தை ஊரில் இல்லாத காரணத்தினாலும், வீட்டிலிருந்து 20km தொலைவில் புதிய பாடசாலை இருப்பதனாலும், புதிய தவணை ஆரம்பித்து ஒரு மாதத்தின் பின்னரே நான் பாடசாலையில் சேர்ந்தேன்.

புதிய பாடசாலையில் தூய கணிதம், பிரயோக கணிதம், எனும் புதிய பாடங்கள் அறிமுகமாயின. பாடசாலைக்கு பிந்திச் சென்றதன் காரணத்தினால் அப் பாடங்களின் அடிப்படை விடயங்களைத் தவறவிட்டிருந்தேன். விளைவு, இப்பாடங்களுக்கு முறையே 12,18 ஆகிய புள்ளிகளைப் பெற்றது தான் தவணைப்பரீட்சை முடிவில் செயற்பாட்டு அறிக்கை வழங்கப்பட்டபோது மிகவும் வெட்கிப்போய்விட்டேன். இதன் காரணமாக 12,18 என இருந்த புள்ளிகளை 42,48, என மாற்ற மறந்து போனதால் என் தந்தையிடம் வகமாக மாட்டிக் கொண்டேன்.

என் மார்க்கனாகிய என் தந்தை என்னைத் தண்டித்ததோடு மட்டுமல்லாது (தண்டனைகளைக் கூற விரும்பவில்லை) எண்மையை விளக்கி எனது வகுப்பாசிரியருக்கு ஓர் கடிதம் எழுதுமாறும் பணித்தர்.

அடுத்த தவணை ஆரம்பித்த போது கடிதத்தையும் செயற்பாட்டு அறிக்கையையும் ஆசிரியரிடம் கொடுத்தேன். உண்மை பேசியதற்காக கனப்படுத்தப்படுவேன் எனும் நம்பிக்கையுடன். ஆனால் நிகழ்வுகள் எதிர்மாறக இடம் பெற்றன. அதிபர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டேன். மற்ற மாணவர்களுக்கு ஓர் பாடமாக அமைய வேண்டும் என்பதற்காக, வருடாந்த ஒன்று கூடலில் (Assembly) வைத்து அனைத்து ஆசிரியர்கள் மாணவர்கள் முன்னிலையிலும் அடி விழுந்தது. மேலும் பாடசாலையிலிருந்து ஒரு கிழமைக்கு என்னை இடைநிறுத்தம் செய்தனர். இப்பெரும் இடியிலிருந்து மீண்டு வழமைக்கு திரும்ப எனக்குப் பலகாலம் பிடித்தது.

இப்படியான எனது கடந்தகால வாழ்வின் சம்பவங்கள் சில என்னை அவ்வப்போது ஆச்சரியப்பட வைத்ததும் உண்டு. உண்மையின் பெறுமதி பற்றிய ஜோர்ஜ் வாஷிங்டனும் அவரது தந்தையின் செர்ரி (Cherry) மறங்கள் பற்றியதுமான கதையே எனது ஞாபகத்திற்கு வந்தது.

மாலையில் மகனை அழைத்து அன்புடன் அருகில் அமர்த்தி உண்மையைக் கூறும்படி கேட்டேன். தானும் இரு நண்பர்களும் தமது புள்ளிகளை மாற்றியதாகக் கூறினான். குறைந்த புள்ளிகள் பெறுதலானது ஒருவனது இயலாமைக்கான முத்திரையல்ல என்பதை அவனுக்கு அன்புடன் எடுத்துக்கூறினேன். அவனும் தான் இனி ஒருபோதும் இப்படியான ஒரு முட்டாள்தனமான காரியத்தில் ஈடுபடமாட்டான். என்பதை உறுதிப்படுத்தினான்.

புதிய தவணை அண்மித்தபோது எனது மகனது செயற்பாட்டு அறிக்கையினை துண்டு துண்டாகக் கிழித்தேன். பின்னர் அவனது வகுப்பாசிரியருக்கு ஓர் கடிதம் எழுதினேன் பழைய செயற்பாட்டு அறிக்கை கிழிந்ததால் புதிதாக தரும்படி கேட்டேன். இன்றுவரை நான் செய்தது சரியா பிழையா என தீர்மானிப்பது எனக்குக் கடினமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடையோ மிகுதி வேலையாட்களோ.....

ஆரோக்கிய வாழ்வுக்கு சில ஆலோசனைகள்

ஆக்கம்
வைத்தியகலாநிதி ஜெயக்குலராஜா

இயற்கையோடு ஒட்டிய, இயல்பான வாழ்வு ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும், என்பது எனது திடமான நம்பிக்கை. நம் முன்னோர் அப்படியான ஆரோக்கிய வாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளனர்.ஆனால் நாம் நாகரீகம் என்ற மாயையில் வீழ்ந்து நல்லவைகளை விட்டு ஆரோக்கியத்தை இழந்து அல்லலுறுகின்றோம்.

இயல்பான உணவும் சோம்பலற்ற சுறுசுறுப்பான செயற்பாடுகளும் அவர்களின் ஆரோக்கிய வாழ்விற்கு அத்திவாரமாக அமைந்திருந்தது என்பதை யாரும் மறுக்க இயலாது. நாம் உட்கொள்ளும் உணவுக் கூறுகளின் முக்கியமானது நீர், எமது உடலில் 70% நீராகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சராசரி மனிதன் தினமும் 6லீட்டர் நீர் அருந்துதல் அவசியம் எனக் கூறப்பட்டிருப்பினும் நம்மில் பலர் நாளொன்றுக்கு 3லீட்டர் திரவங்கள் அருந்துவதுகூட இல்லை.

உடலிலுள்ள ஒவ்வொரு கலமும், இழையமும், உறுப்பும், திறம்பட செயல்பட வேண்டுமெனின் போதிய ளவு நீர் அவற்றுள் இருக்க வேண்டியது முக்கியமாகும். காலை எழுந்தவுடன் தேநீர் அல்லது கோப்பி அருந்து முன் இரு சில்வர் நீர் அருந்துதல் நல்லது. 6 சில்வர் நீர் ஒரு தரத்தில் அருந்த வேண்டும் என்று நம்மை வருத்திக் கொள்ளாமல், பகல் 12மணி நேரத்தில் அடிக்கடி நீர் அல்லது வேறு திரவங்கள் அருந்தினால் உடல் ஆரோக்கியத்திற்கு வேண்டிய நீரை எம்மால் வழங்க முடியும்.

ஒரு சராசரி சில்வர் தம்ளர் 200 மில்லி லீற்றர் கொள்ளும். முதற்கட்டமாக 15 சில்வர் தம்ளர் இடைவிட்டுக் குடிப்போமானால், 3 லீட்டர் குடிப்பது நம்மையறியாமல் வழக்கமாகிவிடும். பின்னர் திரவங்களின் அளவுகளை அவரவர் தேவைகளுக்கேற்ப, வேலை வசதிகளுக்கேற்ப கூட்டிக்கொள்ள முடியும். சுத்தமான நீர், தேனீர், பழச்சாறு, பால், மோர், இளநீர், என்பவற்றை உட்கொள்ள முடிந்தால், சிரமமின்றி எமது நீர்த் தேவையை நிச்சயமாக ஈடுசெய்யலாம்.

நீரின் பலன்கள் சில

❖ எம்மைப்போன்று வெப்ப வலய நாடுகளில் வாழ்பவர்க்கு உடலில் குளிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

❖ சகல உறுப்புக்களும் ஆரோக்கியமுடன், மிகத் திறமையாகச் செயல்பட உதவுகிறது.

❖ இரப்பையில் அமிலத்தன்மை கூடுவதைத் தடுப்பதுடன், இரப்பைப் புண்கள் வராமலும் பாதுகாக்கிறது.

❖ சீராக சமிபாடடைய உதவுகிறது.

❖ பசி ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

❖ பலருக்கு சிரமங்களை உண்டுபண்ணும் வாயுக் கோளாறு மற்றும் மலச்சிக்கலை போக்க உதவும்.

❖ சிறு நீரகக் கிருமித் தொற்றுக்கள், சிறு நீர்த் தொகுதியில் கற்கள் ஏற்படுவதைத் தடுக்கும்.

❖ சருமத்தின் ஆரோக்கியத்துக்கும், முகப் பொலிவுக்கும் ஆதரவாக அமையும்.

இலை வகைகளின் பங்களிப்பு

எமது மண்ணில் இலகுவாகக் கிடைக்கக் கூடிய இலை வகைகள் அநேகம் உள்ளன. தினமும் ஒரு வேளையாவது இலை வகை உண்பதால் பல நன்மைகள் உண்டாகும்

கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் கடும் வெயிலில் வாழும் வெப்பவலய வாசிகளாகிய எமக்கு, உடலுக்கு வேண்டிய குளிர்ச்சியைக் கொடுக்கிறது. இலைகள் பல விற்றமின்களையும், கனியுப்புக்களையும், உள்ளடக்கியது.

விசேடமாக இரும்புச்சத்து, உயிர்சத்து, A, C போன்றவை அதிகமாக உண்டு. சருமத்தின் மினுமினுப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும், இலைகள் பெரிதும் உதவும். "பொன்னாங்காணியைத் தின்றிடுவாய் பெண்ணே பொன் போல முகம் பெற்றிடுவாய்" என்று நம் முன்னோர் கூறிடுவார். இலைகளை உணவில் போதியளவு, தினமும் உட்கொள்ளும்போது - கண் பார்வை கூர்மையடையும் எனவும், 'பகலிலும் நட்சத்திரங்களைப் பார்க்க முடியும்' எனவும் முன்னோர் கூறியுள்ளனர்.

இலைகளின்விசே குணாம்சங்கள் இப்படியாக வலியுறுத்தப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

❖ இலைகளிலுள்ள நார்ப்பொருள், மலச்சிக்கலைப் போக்குவதற்கு மிகவும் உதவுகின்றது.

❖ கூந்தல் கருமையாகவும் ஆரோக்கியமான வளர்ச்சியினையும் பெற்றுக்கொள்ள கறிவேப்பிலை போன்ற இலைகளைச் சாப்பிட வேண்டும்.

எமது பிரதேசங்களில், எளிதாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய இலைவகைகள் பின்வருமாறு:-

பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, அகத்தி, தவசி முருங்கை, கறிமுருங்கை, வல்லாரை, தூதுவளை,சண்டி, முல்லை, முசுட்டை, அறக்கீரை, தொய்யில், பசளி என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

பல வகை இலைகளையும் மாறி மாறித் தினமும் உண்பதால் எமது உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான பல நுண்ணிய ஊட்டச்சத்துக்களும், கனிப்பொருட்களும் கிடைக்கும்.

சமையலின் போது அவதானிக்க வேண்டிய சில நுணுக்கங்கள

இலைகளையும், மரக்கறிகளையும், நன்றாக கழுவிய தன் பின் நறுக்குதல் வேண்டும். அரிந்த பின் கழுவும் போது நீரில் கரையும் BC வகை ஊட்டச்சத்துக்கள், அழிந்து போகும். இலை வகைகள் மற்றும் மரக்கறிகள், வாங்கும் போது வாடி வதங்கியதைத் தவிர்த்து உடன் பிடுங்கியவை, புதிதாக இருப்பவற்றை பார்த்து வாங்குதல் கூடிய பயனளிக்கும்.

நுளம்பும் தொற்று நோய்களும

சில தொற்று நோய்கள் நுளம்பு போன்ற நோய்க் காவிகளால் பரவுகின்றன. மலேரியா, யானைக்கால், சிக்குன்குனியா, டெங்கு நோய்கள் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். நுளம்புகளில் பல இனங்கள் உண்டு. ஒவ்வொன்றும் வெவ்வேறு நோய்களைப் பரப்புகின்றன. சமீப காலமாக புதிய பல நோய்கள் உருவாகியுள்ளன. எதிர் வரும் காலங்களில் நுளம்புகளினால் பரவும் சில புதிய நோய்கள் கண்டுபிடிக்கப்படலாம். எது எப்படியிருப்பினும் பொதுவாக நுளம்புகளின் இனப்பெருக்கத்தை நாம் கட்டுப்படுத்த உதவுவது சமூகத்திற்கு நாம் செய்யும் பேருதவியாகும்.

நுளம்பு இல்லங்களில், வளவுகளில், சிறிய நீர்த் தேக்கங்களில் பெருகுவதைத் தவிர்க்கலாம். சிரட்டைகள், பேணிகள், உடைந்த சட்டி பானைகள், கோப்பைகள், பழைய டயர்கள், குரும்பைகள், தகரடப்பாக்கள், தேவையற்ற உடைந்த போத்தல்கள், லீட்டர் போத்தல்கள், போன்றவற்றில் மழைக்காலங்களில், நீர் சிறிதளவு தேங்கி நிற்பதையும், அதனுள் நுளம்பின் குடம்பிப் பருவங்கள் வளர்வதையும் பார்த்திருப்போம்.

எரிப்பவற்றை எரித்தும், எரியாதவற்றை புதைத்தும் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். வளவினுள் தேவையற்ற புதர், செடிகள் ஒளி புகாவண்ணம் அடர்ந்திருந்தால் நுளம்புகள் ஒழிந்து கொள்ளும். பயனற்ற செடிகளை வெட்டி அழிக்கலாம். வடிகால்கள் சீராக அமையாமல் நீர் தேங்கி நின்றால், அசுத்தமாக இருந்தால். சில வகை நுளம்புக்கு அது வாய்ப்பாகி விடும்.

1. நுளம்பு கடித்தால், எம்மைப் பாதுகாக்க நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல்

2. நுளம்பு எதிர்ப்பு திரவங்கள் களிம்புகளை உடலில் பூசிக்கொள்ளலாம்.

3. நுளம்புத்திரி, வேப்பம் இலை, வேப்பம் கொட்டைப் புகை பயன்படுத்தலாம்.

4. வீட்டு யன்னல்களுக்கு நுளம்பு புகாத வலைகள் அடிக்கலாம். யன்னல்களை மாலை வேளையில் மூடி வைக்கலாம்.

5. வீட்டினுள் நுளம்பு ஒளிந்திருக்கும் இடங்களைத் துப்பரவு செய்யலாம்.

6. நுளம்பு எதிர்ப்பு மருந்துகளை, ஒழுங்காக விசிறலாம்.

இப்படியாக பல யுத்திகளைப் பயன்படுத்தி எம்மால் தவிர்க்கக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்.

துன்பம் ஒரு மறைபொருள் அல்லது துன்பத்தை ஏற்பது உண்மைக் கிறிஸ்தவம்

திருமதி P.F. சின்னத்துரை ஓய்வுபெற்ற அதிபர்

இன்றைய உலகின் பல பாகங்களிலும் எண்ணிலடங்காத வியாபார விளம்பரங்கள் அளவிற்கதிகமாகக் காட்டப்படுகின்றன. இவ்விளம்பரங்களைக் காணும் மனிதன் அவற்றை அடைய ஆசைப்பட்டு அடைய முடியாது துன்புறுகின்றான். மனித உரிமைகளும், மனித நேயமும் மறுக்கப்பட்டதாலும் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கின்றான். அறிவிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேறிவரும் மனிதன் இத்தகைய துன்பங்கள், வேதனைகள் வரும்வேளை அதை ஏற்க மறுப்பதுடன் நம்பிக்கை இழந்தவனாகவும் காணப்படுகின்றான். இதன் காரணமாகப் பல கசப்பான முடிவுகளையும் எடுக்க முற்படுகின்றான். குறிப்பாகக் கூறின் துன்பங்கள் இன்றியே எதையும் சாதிக்க விரும்புகின்றது இன்றைய சமுதாயம் எனலாம்.

ஆனால் ஒரு இலட்சியத்தை நோக்காக் கொண்டு வாழ்கின்றவர்கள் எதையும் இழக்கத் தயாராக இருக்கின்றார்கள். தங்கள் இலட்சியத்தை அடைய எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அதை ஏற்கத் தயங்குவதும் இல்லை, பயப்படுவதும் இல்லை. உண்மையில் துன்பங்களை ஏற்பதற்கு தியாக உள்ளமே தேவைப்படுகின்றது. இத்தியாகம் அன்பிற்கு அச்சாரமாகும். எனவே குறிப்பிட்ட இலட்சியத்தை அடைய வேண்டுமாயின், துன்பம், தியாகம், அன்பு என்பன அடிப்படையாக அமைகின்றன. இந்த உண்மையின் பிரதிபலிப்பை நாம் கிறிஸ்துவில் காணலாம். இவ்வுலகில் அவர் வாழ்ந்த வாழ்க்கை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பொதுவாக நோக்குமிடத்து சமுதாயத்தில் மறுமலர்ச்சியை அல்லது மாற்றத்தைக் கொண்டு வந்தவர்கள் எல்லோரும் தங்களுக்கு வந்த துன்பங்களையும், இன்னல்களையும் ஏற்று அதன் வழியாகத்தான் புதிய வரலாறு படைத்துள்ளனர். பழைய ஏற்பாட்டில் மோயீசன் மக்களின் துன்ப நிலை கண்டு அவர்களுடன் தன்னை ஐக்கியப்படுத்தி அவர்களுக்காக ஆண்டவரிடம் பரிந்து பேசியதை நாம் காணலாம். பெரும் செல்வந்தனான யோபு எல்லாவற்றையும் இழந்து தொழு நோயால் பீடிக்கப்பட்டுக் கொடிய வேதனைகளை அனுபவித்தார். அச்சமயம் இவரின் உறவினர், நண்பர்கள் முன்னாட்களில் இவர் செய்த பாவமே இத்துன்பங்களுக்கெல்லாம் காரணம எனப் பழிந்துரைத்தனர். இவரின் மனைவி இவரின் இழிநிலை கண்டு இறைவனைத் தூற்றும்படி கூறினாள். மாறாக யோபு - இன்பத்தையும், துன்பத்தையும் தனக்குத் தந்த இறைவனை மேலும் அன்பு செய்தார். பொறுமையுடனும், கீழ்ப்படிவுடனும் துன்பங்களை ஏற்றார். யோபு பாவி என்பதால் துன்புறவில்லை. நீதிமான்களுக்கும் துன்பங்கள் வரத்தான் செய்கின்றன. இத்துன்பங்களின் வழியாக நீதிமான்கள் புடமிடப்படுகின்றனர் என்பதே உண்மையாகும்.

துன்பம் என்பது ஒரு புரியாத புதிராகும். அது மறை பொருளாகவே உள்ளது. ஒருமுறை இயேசுவின் சீடர்கள் இயேசுவிடம் கண்தெரியாத ஒருவரைக் காட்டி "ராபி இவன் குருடனாகப் பிறந்தது யார் செய்த பாவம்" என்று வினவினர். அதற்கு யேசு"இவன் செய்த பாவமும் அன்று. இவன் பெற்றோர் செய்த பாவமும் அன்று.கடவுளுடைய செயல்கள் இவன் மட்டில் வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தான்". (அரு.9:1-3) என்றார். இன்றும் எங்களில் பலர் துன்பங்கள் வரும் வேளை நாம் யாருக்கும் எத்துன்பத்தையும் செய்யவில்லை. எமக்கு ஏன் இறைவன் இத்தகைய துன்பங்களை அளிக்கிறார் என மனம் சலிக்கின்றனர். தளர்ந்து போகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு முன் இயேசு வாழ்ந்த பாதையை நோக்க வேண்டும். தனது வாழ்வில் சிலுவைப் பாதையை ஏற்றுக் கொண்ட இயேசு ஜெத்சமெனித் தோட்டத்தில் இத்துன்பக் கலத்தைத் தான் தாங்க முடியுமா எனக் கலங்கியவேளை இறைவனைக் கூவி அழைத்து "இத்துன்பப் பாத்திரத்தை என்னிடமிருந்து அகற்றியருளும். ஆனால் என் சித்தப்படியல்ல. உமது சித்தப்படியே ஆகட்டும்" மாற்கு 14:36 எனச் செபிக்கிறார். பின் தாழ்மையுடன் இறை சித்தத்திற்கு ஏற்பத் துன்பப் பாத்திரத்தை ஏற்று மனுக்குலத்திற்கு மீட்பைப் பெற்றுத்தந்தார். இவ்விதமாக ஒருவன் பிறருக்காகத் தன்னைக் கையளிப்பதில் தான் தன்னைக் கண்டுகொள்ள முடிகின்றது.

இந்தக் கையளித்தலில் தான் இறைமகன் இயேசு துன்பத்தை ஏற்றார். இறைவனை நாடினார். உண்மையில் துன்பங்களின் போது இறைவன் எம்முடன் கூட இருக்கின்றார் என்பதை நாம் உணரவேண்டும்.

பெரும்பாலும் நீதிக்காக, உண்மைக்காக வாழ்வோரின் நிலை துன்பங்கள் நிறைந்ததாக உள்ளது. மேலும், சமூகத்தில் அவர்கள் அதிகார வர்க்கத்தவரால் தண்டிக்கப்படவும் செய்கின்றனர். இவர்களை நோக்கித்தான் இயேசு "நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்" எனக் கூறினார். (மத.5:10-12)

"தாழ்ச்சியுடன் துன்பங்களை ஏற்று வாழ்தல்தான் உண்மைக் கிறிஸ்தவமாகும். தன்னைப் பின் செல்ல விரும்புகின்றவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்" என்றார்.

இயேசுவின் கூற்றை நாம் சிந்திக்க வேண்டும். துன்பங்கள் இல்லாத வாழ்வு என்பது இன்றைய சூழ்நிலையில் நினைக்கவும் முடியாத ஒன்று. எம்மைச் சூழத் துன்பங்களும், அவலங்களுமே மலிந்துள்ளன. உண்மையான அன்பு துன்பத்தில்தான் காண்பிக்கப்படுகின்றது.

எனவே எமது துன்பங்களையும் ஏற்று பிறரின் துன்பங்களிலும் பங்குகொண்டு வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்வாகும்.

"தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை." (அரு.15:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்

14.02.2009 அன்று சென். ஜோன்ஸ் கல்லூரி பொது நிலையாளர்களுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறி வகுப்பு அங்குரார்ப்பண நிகழ்வின்போது உரை நிகழ்த்தியவர்களைப் படத்தில் காணலாம். அருட்பணி. கி.போல்ராஜ் (பதிவாளர், இலங்கை இறையியல் கல்லூரி, பிலிமத்தலாவை), அருட்பணி. N.J.ஞானப்பொன்ராஜா (அதிபர் சென்.ஜோன்ஸ் கல்லூரி), அருட்பணி. அ.ஸ்ரீபன், அருட்பணி. N.அருள்நாதன், அருட்கலாநிதி A.W.ஜெபநேசன் (அதிபர், இலங்கை இறையியற் கல்லூரி, பிலிமத்தலாவை)

செய்தித் தொகுப்புகள்

சமூக மீள் கட்டுமானத்தில் வாலிபர்களின் பங்களிப்பு

சமூக மீள் கட்டுமானத்தில் வாலிபர்களின் பங்களிப்பு என்ற கருப்பொருளில் 09.02.2009 அன்று பரி. யாக்கோபு ஆலயத்தில் வாலிபர்களுக்கான ஓர் ஒன்றுகூடல் நடைபெற்றது. இவ் ஒன்று கூடலில் 50 வாலிபர்கள் கலந்து கொண்டனர். அருட்பணியாளர்களான தயாளேஸ்வரன், நியூட்டன் - ஜேக்கப், த.கிறிஸ்ரிகுமார், அ.ஸ்ரீபன் போன்றோர்களும் இதில் கலந்து கொண்டனர். சமூக கட்டுமானத்தில் அன்பு முதலிடம் பெறுகின்றது. அதனை எமது வாழ்க்கையின் மூலம் காண்பிக்க வேண்டும். என அருட்பணியாளர் த.கிறிஸ்ரிகுமார் கூறினார். மீள் கட்டுமானத்தில் உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள், நகரமன்றங்கள், போன்றவற்றின் பங்களிப்பு மிகவும் முக்கியமானவைகள் என்பதை உதாரணங்களுடன் திரு திருமதி சாந்தசீலன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இவ் ஒன்று கூடல் காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெற்றது. என்பது குறிப்பிடத்தக்கது.

நடமாடும் இறையியற் கல்லூரி

14.02.2009 அன்று சென்.ஜோன்ஸ் கல்லூரி பொது நிலையாளர்களுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறி வகுப்பு அங்குரார்ப்பண நிகழ்வு காலை 9 மணிக்கு நடைபெற்றது. சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கிறிஸ்தவ கற்கைநெறி அலகும், பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகர அமைப்பும் ஒன்றிணைந்து கற்கை நெறியினை யாழ். பிரதேசத்தில் ஒழுங்குபடுத்தினர். பிலிமத்தலாவையிலுள்ள இலங்கை இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்கலாநிதி A.W.ஜெபநேசன் அவர்களும் வருகை தந்திருந்தனர். செரம்பூர் பல்கலைக்கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தப் பட்டப் படிப்பு 2 வருட கால எல்லையை உள்ளடக்கியதாகும். இக்கற்கை நெறியின் இணைப்பாளராக அருட்பணியாளர் ந.அருள்நாதன் அவர்களும் அருட்பணியாளர் அ.ஸ்ரீபன் அவர்களும் கடமையாற்றுகின்றனர். இந் நிகழ்விற்கு சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருட்பணியாளர் N.J.ஞானப்பொன்ராஜா அவர்கள் தலைமை தாங்கினார். இப்பயிற்சிப் பட்டறையில் 35 மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மக்களே நீதியின் கவசங்கள்

வன்னியில் தொடரும் மனித அழிவுகளின் மத்தியில் அமைதி வேண்டி உணவுத் தவிர்ப்பு பிரார்த்தனைத் தொடர் கூட்டங்கள் 28.01.2009 அன்று யாழ். மரியன்னை பேராலயத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் ஆண்டகை தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளும், தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர் அருட்கலாநிதி S.ஜெபநேசன் அவர்களும் யாழ்.குருமுதல்வர் அருட் பணி S.P.நேசக்குமார் அவர்களும் கலந்து கொண்டனர். நீதிக்கும், உரிமைக்கும் கவசங்களாக மக்களே காணப்படுகின்றார்கள். என அருட்பணியாளர் பிரான்சிஸ் ஜெயசேகரம் அவர்கள் இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் உரையாற்றினார். 500ற்கும் மேற்பட்ட மக்கள் இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகப்பணியோடு இணைந்த சமயப்பணி

வன்னியில் நடைபெறும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வவுனியாவிற்கு வருகை தந்த மக்களின் நலன்களை அறிந்து அவர்களுக்கு ஏற்ற சேவையை வழங்குவதற்கென இலங்கைத் திருச்சபையின் சமூக சேவை அமைப்பினரும் சமாதானப் பணியினரும் ஒன்றிணைந்து தை மாதம் 23ம் திகதி முதல் 25ம் திகதி வரை வவுனியாவிற்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டனர். இக்குழுவில் அருட்பணியாளர் நோயல் பர்னாந்து, அருட்பணியாளர் ஏற்றியன் ஏரன், திரு.கெலரி போன்றவர்கள் உள்ளடங்குகின்றனர். இடம்பெயர்ந்து வவுனியா முகாமில் தங்கியுள்ள அருட்பணியாளர் டானியேல் மற்றும் கருணா நிலையப் பிள்ளைகள் ஏனைய மக்கள் போன்றவர்களின் நலன்களைக் கவனிக்கும் பணியில் 11.02.2009 முதல் யாழ். குரு முதல்வர் அருட்பணியாளர் S.P நேசக்குமார் அவர்கள் வவுனியாவில் தங்கியிருந்து தனது பணிகளை மேற்கொண்டார்.16.02.2009 அன்று எமது கொழும்புப் பேராயரும், அவரது மனைவியும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் இருக்கும் மக்களையும் அவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் அவலக்குரல்களையும் கண்டும் கேட்டும் உணர்ந்தனர். இப்பகுதியில் அருட்பணியாளர் பிரியந்தபோல் அருட்பணியாளர் மனோரூபன் அவர்கள் தொடர்ந்தும் தங்களால் ஆன சேவைகளை மக்களுக்கு ஆற்றி வருகின்றனர்.

வாழ்த்துகின்றோம்

கைதடியில்லுள்ள நவீல்ட் பாடசாலைக்கு 1.3.2009 முதல் புதிதாக நியமனம் பெற்ற திரு. B.S.மகேந்திரன் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம். இவர் கல்விப் பொதுத்தராதர உயர்தர கற்கை நெறியை தெல்லிப்பளை பிலுள்ள யூனியன் கல்லூரியில் கற்றார். விஞ்ஞான மாணிப்பின் பட்டப்படிப்பினை யாழ்.பல்கலைக் கழகத்தில் கற்று 1986 முதல் 1992ஆம் ஆண்டு காலம் வரை திருகோணமலையிலுள்ள இந்துக் கல்லூரியில் கடமையாற்றினார். பின்னர் 2009 மார்ச் மாதம் வரை யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார். இவருடைய பணி சிறக்க மனதார வாழ்த்துகின்றோம்.

வருந்துகின்றோம்

அமரர் ஆறுமுகம நவநீத கிருஷ்ணன்அவர்கள் 31.01.2009 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் 11.11.1939 அன்று மண்ணுலகில் அவதரித்தார். தனது கல்லூரி வாழ்வை சென் ஜோன்ஸ் கல்லூரியில் செலவு செய்தவர், பின்னர் திட்ட உத்தியோகஸ்தராக இலங்கைத் தொலைத்தொடர்புத் திணைக்களத்திலும், வெளிநாட்டிலும் பணியாற்றினார். நல்லூரிலுள்ள பரி.யாக்கோபு ஆலயத்தில் உண்மையையும் நம்பிக்கையையும் பொறுப்பு வாய்ந்த அங்கத்தவராகவும் சபைப் பாதுகாவலனாகவும் கலைஞனாகவும் ஆலோசகனாகவும் கடமையாற்றினார். 2002 -2003 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் பொருளாராகவும் 2002 - 2005 வரையான காலப்பகுதியில் சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அமைப்பின் செயலாளராகவும் 2003 - 2004 வரையான காலப்பகுதியில் கிதியோன் வேதாகம அலகின் தலைவராகவும் 2005 - 2007 வரையான காலப் பகுதியில் யாழ். YMCA இன் தலைவராகவும் கடமையாற்றினார். இவருடைய பிரிவினால் வாடுகின்ற மனைவி, பிள்ளைகள் சகோதரர்கள், உற்றார் உறவினர்கள் அனைவரையும் ஆண்டவர் ஆறுதல்படுத்த வேண்டும். என்று எமது பிரார்த்தனைகளில் நினைந்து கொள்வோம்.

புலம்பல்

பதுங்கு குழியே வாழ்க்கை - இங்கு
பயந்து வாழும் நிலையே மிச்சம்

பயந்து வாழ்ந்தோம் - எறிகணை
அருகினில் வீழ்ந்ததனாலே
பயந்து பதுங்கி வாழந்தோம் - துப்பாக்கி ரவை
எம் அருகினில் சீறி உரசியதாலே

உறக்கமின்றி விழித்திருந்தோம் - தினம்
நிம்மதியின்றியே வாழ்ந்தோம்.
விடியல் விடியும் - என
நாம் காத்திருந்தோம்
விடியவில்லை எமது வாழ்வு

வீதிகளெங்கும் சிதறிக் கிடக்கும் - பல
உயிர்களின் உடலும்
மலிவாய்க் கிடைக்கும் பொருளா? - இங்கு
மனிதமில்லை மனமுமில்லை
வன்னியில் வாழ்ந்தது சாபக்கேடா?

எம்மோடு துன்புறும் இறைவா - நீரும்
இயலாமையின் இறைவனா?
உம்மில் எமக்கு ஆறுதல் - கூட
கூற முடியாமல் முட்கம்பி வேலிகள் போட்டு
தடுத்து நிறுத்தி விடுகின்றார்களே

முட்கம்பி வேலிகளைத் தாண்டி - எப்போது
எமக்கு ஆறுதல் கூற வருவீர்
இயல்பாக நாம் நடமாட இறைவாக - எப்போது
எமக்கு நிரந்தர விடுதலை தருவீர்? - எப்போது
உம் பாதத்தில் நாம் மனம்விட்டு அழ முடியுமோ?

ஆக்கம
அருட்பணி. ஞா.மனோரூபன்
வவுனியா

கடிகாரம் ஓட மறுக்கிறது

இன்னும் என் வீட்டுக் கடிகாரம் ஓடவில்லை,
அதை இயக்கும் பற்றறி என் கைக்கு அகப்படவில்லை.
ஒவ்வொரு முறையும் பழக்கப்பட்ட என் கண்கள், நேரம் பார்க்க
கடிகாரம் பார்த்து, ஏமாந்து திரும்புகின்றன.

96இல் திரும்ப யாழ் வந்தபோது நின்றுவிட்டிருந்த கடிகாரம்
இன்றும் ஓட மறுக்கிறது.
96இல் காணப்பட்ட வீதித் தடைகள், சோதனைக் கெடுபிடிகள்,
பொருள் தட்டுப்பாடு,
மின்வெட்டு..... அன்று ஆண்டு ஒன்று படித்துக் கொண்டிருந்தது
என் பிள்ளை.

இன்று என் பிள்ளை ஆண்டு பன்னிரண்டு....
பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டதை உணர்ந்தேன்.
மாற்றங்கள் பெரிதாக ஒன்றும் இல்லை!
வரவர இறுக்கம் கூட வீதி மூடல் உட்பட.

அண்மையில் இரண்டு முறை இரண்டு நாடுகளுக்கு
கடமை நிமித்தம் ஒன்று சுற்றுலா நிமித்தம் மற்றொன்று
ஆகா என்ன சுதந்திரக் காற்று பயமற்ற சூழல்,
பார்க்க இரசிக்க எவ்வளவோ! பண்பு, ஒழுக்கம் , மரியாதை

அங்கு, எங்கும் கடிகாரம் சரியாக ஓடுகிறது
எம் மண் கசக்க, அது இனிக்கிறது!
என் செய்வேன் எம் நிலை இன்னும் எவ்வளவு காலம்?
ஆம், 2008 ஆம் ஆண்டு விடைபெறக் கையசைக்கிறது.

என் பிள்ளை இன்னும் இக்கெடுபிடிக்குள் சிக்குண்டு
பயத்துடன் இதே சூழலில் வாழவேண்டுமா?
கலங்குகிறேன், திகைக்கிறேன், யோசிக்கிறேன்,
விடை கிடைக்குமா? என் கடிகாரம் ஓடுமா?

அருட்பணி S.P. நேசக்குமார்
யாழ். குருமுதல்வர்

விலை ரூபா10/= வருடசந்தா ரூபா 100/=
ஆக்கங்கள் எழுதுங்கள் தெளிவு கண்டு பிரசுரிப்போம்
ஆசிரியர்,
தெளிவு,
யாழ். குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல. 452, பிரதான வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரியில் அமைந்துள்ள தெளிவு அலுவலகத்தில் அமைந்துள்ள சுரபி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியர்: அ.ஸ்ரீபன்